சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

ஞாயிற்றுக்கிழமை 04.04.2021 | supeedsam.com | supeedsam@gmail.com

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

அதுவே இலங்கைக்கு நல்லது என்கிறார் சுமந்திரன்

(ரக்ஸனா)

இலங்கை சரியான வழியில் பயணிக்க வேண்டுமாகயிருந்தால் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப் பட வேண்டும். அதுவே இலங்கைக்கு நல்லதாகும் என ஜனாதி பதி சட்டத்தரணியும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

மண் கடத்திய நால்வர் வவுணதீவில் கைது

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வரை மட்டக்களப்பு வவுணதீவு பொலிசார் கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.நிசாந்த தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் கோரிக்கை

(ராஜ்)

ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நீதியை நிலை நாட்ட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் வெளியிட்டுள்ள

02 ஆம் பக்கத்தில்...

மன்னாரிலிருந்து வடக்குக்கு நாளை தனியார் பேருந்து சேவை இல்லை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் துக்க தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் மன்னாரில் இருந்து வடமாகாணத்திற்கான தனியார் போக்குவரத்துச் சேவைகள் நாளை திங்கட்கிழமை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை

02 ஆம் பக்கத்தில்...

அச்சமில்லாமல் செல்லுங்கள்

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் அச்சமின்றி ஈஸ்டர் தின வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

காணாமல் போனவர்கள் பற்றி முறையிட்டால் நடவடிக்கை

ஜயநாத் கொலம்பகே தெரிவிப்பு

(ஊர்க்காவலன்)

காணாமல் போனதாகக் கூறப்படுபவர்களது உறவினர்களால் ஏன் பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஜனாதிபதியிடமோ முறைப்பாடளிக்க முடியும். அவர்களால் முறைப்பாடளிக்கப்பட்டால் அதற்கேற்ப சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும் என வெளியுறவுகள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளால் முன்வைக்கப்படுகின்ற பிரதான குற்றச்சாட்டுக்களான நல்லிணக்கம், பொறுப்பு கூறல் மற்றும் காணாமல்

02 ஆம் பக்கத்தில்...

உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் போலி பிரசாரங்களை தோற்கடிப்பேன்

வவுனியாவில் ஜனாதிபதி சூளுரை

(வவுனியா ரவி)

அரசாங்கத்துக்கு எதிரான உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் போலி பிரசாரங்களைத் தோற்கடிப்போம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்துக்கான கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்வை வவுனியாவில் ஆரம்பித்து வைத்து, உரையாற்றும் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக பல்வேறு விதமாக திட்டமிடப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...



அரசாங்கத்தின் புத்தாண்டு பரிசு

எதிர்வரும் புத்தாண்டு காலப்பகுதியில் மேலும் சில பொருட்கள் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதிய விலையின் கீழ் இந்த பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

ஏப்ரல் இறுதிக்குள் முடிவு

க.பொ.த.சாதரண தரப் பரீட்சையின் முடிவுகள் ஏப்ரல் இறுதிக்குள் கிடைக்கும் என்று நம்புவதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் ஜி.எல்.பீரிஸ் மேலும் கூறியுள்ளதாவது,

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமில்லாமல் செல்லுங்கள்

நாட்டின் சகல பகுதிகளிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய பொறுத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்படவில்லை என்றும் அது சிரமமான விடயம் என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டார்.

எனினும் தேவைக்கேற்ப பொறுத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதால் மக்கள் அச்சமின்றி ஈஸ்டர் தின வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

ஏப்ரல் இறுதிக்குள் முடிவு

ஜூன் மாதத்திற்குள் க.பொ.த. சாதரண தரப் பரீட்சையின் முடிவுகளை வழங்க முடியுமென எதிர்பார்க்கின்றோம். இதே வேளை பல்கலைக்கழகங்கள் தொடர்பாக முழுமையாக முடிவு எடுக்கப்படவில்லை.

ஆனால் அவற்றுக்கும் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுப்போம். அந்தவகையில் கூடிய விரைவில் பல்கலைக்கழகங்களைத் தொடங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் புத்தாண்டு பரிசு

அதற்கமைய சந்தையில் 150 165 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையில் விற்பனையாகும் கறுப்பு சீனி ஒரு கிலோ கிராம் 115 ரூபாயக்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வணிக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படும் 100 கிராம் தேயிலை 135 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் நிலையில் நாளை மறுதினம் முதல் 95 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

தற்போது 550 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் 500 மில்லிலீற்றர் சோயா எண்ணெய் 310 ரூபாய்க்கு பெற்றுக் கொள்ள முடியும்.

SLS சான்றிதழ் கொண்ட முகக் கவசம் ஒன்று 14 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும். அத்துடன் அப்பியாச கோப்பிகளின் தற்போதைய விலை 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதிய விலையின் கீழ் இந்த பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி...

அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இலங்கையில் உள்ள கத்தோலிக்கர்களுக்கும் அந்த அமைப்பு ஒருமைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட, உயிரிழந்த சகோதர, சகோதரிகளை நினைவுகூர்ந்துள்ள முஸ்லிம் கவுன்சில், அவர்களுக்கு தாமதமின்றி நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் அனைத்து வகையான தீவிரவாதங்களும் இல்லாதொழிக்கப்பட்டு, அமைதியையும் சகவாழ்வையும் உறுதிப்படுத்துவதற்கு முஸ்லிம்கள் உட்பட அனைத்து இலங்கையர்களும் அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

மண் கடத்திய நால்வர் வவுணதீவில் கைது

நேற்று சனிக்கிழமை அதிகாலை வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காஞ்சனங்குடா குறுஞ்சியடி மும்மாரி குளத்தில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த நால்வரை வவுணதீவு பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களுடன் மணல் நிரப்பபட்ட இரு உழவு இயந்திரங்களும் சில உபகரணங்களும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதான நபர்களும் உழவு இயந்திரமும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com

We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.

Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

ஜோசப்பரராஜசிங்கம் மக்கள் அமைப்பின் கல்விமேம்பாட்டு செயல்திட்ட நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் மட்டக்களப்பு செங்கலடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்...

உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் போலி பிரசாரங்களை தோற்கடிப்பேன்

போலி பிரசாரங்கள் சமூகமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தாம் ஆட்சிக்கு வரும் போது, சிலர் மீண்டும் வெள்ளை வேன் யுகம் ஏற்படும் என்று கூறியதாகவும், இப்போது அவை எதுவும் இல்லாதால் காடழிப்பு விடயத்தைப் பிடித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் காடழிப்பு இடம்பெறும் போது, அமைதியாக இருந்தவர்கள் இன்று சூழலியலாளர்களாக மாறியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல் போனவர்கள் பற்றி முறையிட்டால் நடவடிக்கை

போனார் விவகாரம் உள்ளிட்டவற்றுக்கு வெகுவிரைவில் பதிலளிக்கப்படும் என்றும் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

2015 இல் இலங்கை அரசாங்கத்தால் இனை அனுசரணை வழங்கப்பட்ட 30/1 பிரேரணைக்கமைய காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்கமை காணாமல் போனதாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காணாமல் போனதாகக் கூறப்படுபவர்களது உறவினர்களால் ஏன் பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஜனாதிபதியிடமோ முறைப்பாடளிக்க முடியும். அவர்களால் முறைப்பாடளிக்கப்பட்டால் அதற்கேற்ப சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

ஆனால் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறுபவர்கள் ஒரு சிலருடைய தேவைக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மன்னாரிலிருந்து வடக்குக்கு நாளை தனியார் பேருந்து சேவை இல்லை

ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், இது குறித்து மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச்சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவிக்கையில், இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், அன்றைய தினத்தைத் துக்க நாளாக அனுஸ்ஷ்டிக்குமாறு பல்வேறு தரப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக மன்னாரில் இருந்து வட மாகாணத்திற்கான தனியார் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் திங்களன்று நிறுத்தப்படவுள்ளன. அத்துடன், உள்ளூர் சேவைகளும் அன்றைய தினம் இடம் பெறாது. வட மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் இருந்தும் மன்னாருக்கான தனியார் சேவைகள் அன்றைய தினம் இடம் பெறாது. மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச்சங்கப் பிரதிநிதிகளும் ஆயரின் துயரில் பங்கு கொள்வதோடு முழுமையாக துக்க நாளை அனுஷ்டிப்போம்.

அன்றைய தினம் இறுதி அஞ்சலிக்காக வருகின்ற மக்கள் மீண்டும் திரும்பிச்செல்வதற்கு, தேவை ஏற்படின் விசேட போக்குவரத்துச் சேவைகள் எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மறைந்த முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பதிலளித்தார்.

இதன்போது சுமந்திரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

நாங்கள் சர்வதேசத்திடமே நீதி கோரி நிற்கின்றோம். சர்வதேசத்தின் அறிக்கைகளை நாங்கள் சாதகமாகவே பாவிக்கின்றோம். இந்த அறிக்கைகளுக்கு எதிராக யாரும் கருத்துகளை தெரிவித்ததாக நான் அறியவில்லை.

இருதரப்பினரும் போர்க் குற்றம் செய்தார்கள் என்று நிபுணர்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்திடமிருந்து எங்களுக்கு நீதியையும், நாங்கள் சொல்வதையே அங்கிருந்து சொல்ல வேண்டும் என்பதை யாரும் எதிர்பார்க்க முடியாது.

அனைத்து பக்கங்களையும் விசாரணை செய்து சரியான தீர்மானங்களையே அவர்கள் எடுப்பார்கள். விசாரணைகள் நடந்து முடிந்துவிட்டது. அதனை நீதிமன்ற பொறிமுறைக்குள் கொண்டு செல்லவேண்டுமாகயிருந்தால் அது கட்டாயமாகும்.

வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றியது இன அழிப்பு தீர்மானம் என்று நாங்கள் கூறினாலும் அதன் இறுதியில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்று செல்லப்பட்டுள்ளது. அவ்வாறானதொரு சர்வதேச குற்றம் இல்லை. அதிலேயே செல்லப்பட்டுள்ளது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு இன்னும் சர்வதேச குற்றங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றுதான் அந்த தீர்மானம் முடிவுறுகின்றது.

நாங்களே சொல்லுகின்றோம். இங்கு நடைபெற்றது சர்வதேச குற்றம் இல்லையென்று. அதனையே நாங்கள் இன அழிப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் எனதலையில் தூக்கிவைத்து கொண்டாடி வருகின்றோம். தற்போது கிழக்கில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகள், இன அழிப்பின் ஒரு அங்கமாகவுள்ளது. நாங்கள் அதனை மறுக்கவில்லை. ஒருவரின் மனதில் உள்ள இனஅழிப்பு எண்ணங்கள் மாறிமாறி வருவதையே கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு என்று சொல்லப்படும்.

எனினும் அவ்வாறான இன அழிப்பு சர்வதேச சட்டங்களில் இல்லை. எனினும் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடமாகாண சபையில் நிறைவேற்றியதை வைத்து இனிவரும் காலங்களில் சேர்த்துக்கொள்வார்களோ தெரியாது.

தமிழ் மக்களுக்கு நாங்கள் பாரிய எதிர்பார்ப்பினை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வழங்கி அவர்களுக்கு கிடைக்காததன் காரணமாகவே விரக்தி நிலையில் உள்ளனர். அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மனநிலையில் உள்ள விரக்தி நிலையும் அதுதான். சர்வதேசம் எங்களை கைவிட்டுவிட்டது என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது.

சர்வதேசம் கைவிடவில்லை. நாங்கள் தேவையற்ற வகையில் மக்களுக்கு கூடுதலான எதிர்பார்ப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் உண்மை நிலையினை சொன்னால் இவர் அரசாங்கத்திற்காக பேசுகின்றார் என்பார்கள். நாங்கள் அரசாங்கத்திற்காக பேசவில்லை உண்மையினை சொல்லுகின்றோம்.

பொய்யான எதிர்பார்ப்பினை வழங்குவது என்பது பிழையான விடயமாகும்.

30ஆயிரம் பேர் காணாமல் போயிருக்கின்றதற்கான ஆதாரங்கள், சாட்சியங்கள் உள்ள நிலையில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருவேன் என்ற எதிர்பார்ப்பினை ஒரு தாய்க்குக் கொடுப்பது என்பது மிகவும் கொடுமையான செயல். அதன் காரணத்தினால் உண்மையினை சொல்லவேண்டும்.

நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அதற்கு இயன்றதை நாங்கள் செய்வோம். உண்மையைச் சொல்வது ஒருபோதும் துரோகச்செயல் இல்லை.

ஐ.நா.தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டபோது அதனை சிங்கள ஊடகங்கள் இலங்கைக்கு எதிராக செயற்பட்ட நாடுகளுக்கு நன்றி தெரிவித்த சுமந்திரன் எம்.பி என்று செய்தி வெளியிட்டபோது சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எதிரான கருத்துகள் வெளிப்பட்டன.

சிங்கள மக்கள் மத்தியிலும் துரோகி தமிழ் மக்கள் மத்தியிலும் துரோகியாக நான் செல்லப்படுகின்றது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்காக நாங்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உழைத்தோம். அதனை நாங்கள் மறுக்கவில்லை.

இது இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை. இலங்கை சரியான வழியில் பயணிக்க வேண்டுமாகயிருந்தால் இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே இலங்கைக்கு நல்லதாகும். இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தப்பிச்செல்வது இலங்கைக்கு நல்லதல்ல.

அதற்கு உதவியாக சர்வதேசம் வருகின்றபோது அது இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை. ஆனால் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அது எதிரான தீர்மானம். ஆட்சியாளர்கள் அதனை தடுக்கின்றனர். செய்யவிடாமல் குறுக்கே நிற்கின்றனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்த தடவை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் முக்கியமான தீர்மானம். இப்படியான தீர்மானமொன்று நிறைவேற்றப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. காரணம் 47நாடுகளை நாங்கள் எடுத்துப் பார்த்தபோது அது சாதகமாக இருக்கவில்லை. ஆனபடியால் இம்முறை மிகவும் கடினம் என நினைத்திருந்தோம்.

மனிதவுரிமை உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லட் அம்மையார் மிகமிக சக்தி வாய்ந்த காட்டமான ஒரு அறிக்கையை முதலில் வெளியிட்டார். டிசம்பர் மாதமே இவ் அறிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டது. மனிதவுரிமை உயர்ஸ்தானிகர் மிச்சேல்பச்லட் அவர்களும் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஒருவராவார். சிலி நாட்டிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அந்த நாட்டின் ஜனாதிபதியாகவும் இருந்தவராவார். அவருக்கு சர்வதேசத்தில் விஷேடமாக மனித உரிமைகள் ஆணையகத்தில் மிகப் பெரிய மதிப்பு இருக்கின்றது.

அந்த அம்மையாரின் அறிக்கை காரணமாக பல நாடுகள் அதற்கு மாறாகச் செல்லத் தயாராக இல்லை. அதனால் தான் தென்னமரிக் காவில் பல நாடுகள் இதற்கு சாதகமாக வாக்களித்தார்கள். ஏனென்றால் மிச்சேல் பச்லட் அம்மையாரைப் பற்றி அந்த நாட்டின் பலருக்குத் தெரியும். 47நாடுகள் கொண்ட சபையில் எங்களுக்கு ஆதரவு குறைவாக கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் அவரின் அறிக்கை காரணமாக அது மாற்றம்பெற்றது.

மனித உரிமை பேரவையினால் இலங்கையினை குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்லமுடியாது. அதற்கான அதிகாரம் மனித உரிமை பேரவைக்கு இல்லை. நாங்கள் போராட்டங்களை நடாத்தி, சுழற்சிமுறையிலான உண்ணாவிரத போராட்டத்தினை நடாத்தி, உண்ணாவிரத போராட்டத்தில் பத்து பேர் உயிரிழந்திருந்தாலும் மனித உரிமை பேரவையினால் அதனை செய்யமுடியாது. பாதுகாப்பு சபைக்கு மட்டுமே குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கான அதிகாரம் உள்ளது.

நாங்கள் கேட்டது பாரப்படுத்தலுக்கான பொறுப்புக்கூறலுக்கு ஏதுவான காரணியை மனித உரிமை பேரவைக்கு வெளியில் கொண்டு செல்லுங்கள் என்று கோரியிருந்தோம். அது வெளியே விடப்பட்டுள்ளது. நாங்கள் கேட்டதற்கு அமைவாக அது வெளியே விடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தம் வந்திருக்கின்றது. குற்றச்சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகள் கொண்டுவரப்படுகின்றது. பொருளாதார தடைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் கேட்டிருந்தனர். இலங்கைக்கு எதிரான பொருளாதார தடையினை நாங்கள் கோரவில்லை. இலங்கைக்கு எதிரான பொருளாதார தடைவரும்போது அதில் முதலாவதாகவும் மிகவும் மோசமாகவும் பாதிக்கப்படப்போவது தமிழ் மக்களாகும். சிலவேளைகளில் பொருளாதார தடையினை கோரவேண்டிய சூழ்நிலை வரலாம். அதனை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் இன்று நாங்கள் அதனை கோரவில்லை.

இலங்கைக்குள் தீர்வொன்றினை ஏற்படுத்த வேண்டுமானால் சிங்கள மக்கள் மத்தியிலிருக்கின்ற முற்போக்கு சக்திகளும் எங்களுக்கு ஆதரவாக செயற்பட வேண்டும். அவர்களுடைய ஆதரவையும் நாங்கள் தக்கவைக்க வேண்டும். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை வருவது ஆட்சியாளர்களுக்கு ஒரு பிரச்சினையே அல்ல.

அவர்களுக்கு அது அழுத்தமல்ல. அவர்களுக்கு போதுமானளவு வளம் இருக்கின்றது. ஆனால் ஆட்சியாளர்களை குறிவைத்து தடைகள் வருமானால் அதுதான் அழுத்தமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பலமாகத்தான் இன்று இருக்கின்றது. மற்றைய கட்சிகளை இணைத்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு பலவீனமடைந்திடும் என்ற அச்சம்தான் இருக்கின்றதே தவிர எங்களை பலப்படுத்துவதற்கு அவர்கள் தேவையில்லை. என அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் பிரதேசசபை தவிசாளர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் உள்ளிட்ட பலரும் இதன்பொது கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான
காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...

வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...

வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி

Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.

SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage

Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெவிலியாமடு பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை ஏற்படுத்தி மட்டக்களப்பு மாவட்ட இனப்பரம்பலைக் குறைப்பதற்கு முயற்சி

கருணாகரம் சந்தேகம்

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கெவிலியாமடு பிரதேசத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சற்தரையில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுவதை பார்க்கும் பொழுது இங்கு ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தின் இனப்பரம்பலைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவே தோன்றுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்துக்கு களவிஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கெவிலியாமடு கிராம சேவகர் பிரிவில் கந்தர்மலிச்சேனை என்கின்ற மேய்ச்சற்தரைப் பிரதேசத்தை இன்று நாங்கள் பார்வையிட வந்திருக்கின்றோம். ஏற்கனவே நாங்கள் பண்ணையாளர்களுடன் இந்தப் பிரதேசத்தைப் பார்வையிட்டோம். இது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தோம்.

இது சம்பந்தமாக பட்டிப்பளைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து இப்பிரதேசத்திலே சட்டவிரோதமாக நடைபெறும் மரமுந்திரிச்செய்கையை நிறுத்த வேண்டும். காலம் காலமாக இப்பிரதேசம் பண்ணையாளர்களினால் மேய்ச்சற்தரையாகப் பாவிக்கப் பட்டுவந்த பிரதேசம். இது தொடர்ந்தும் மேய்ச்சற்தரையாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான மேய்ச்சற்தரைப் பிரசேத்தில் மரமுந்திரிச் செய்கை என்பது நிறுத்தப்பட வேண்டும் என்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே முடிவெடுக்கப் பட்டது. அம்முடிவு பிரதேச செயலாளரின் ஊடாக மாவட்ட வனஇலாகா திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டும் தற்போது நாங்கள் வருகை தந்து பார்க்கின்றபோது மேற்படி மரமுந்திரிகைச் செய்கை மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இதனைப் பார்க்கும்போது ஒன்று எங்களுக்கு விளங்குகின்றது. கடந்த காலங்களில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்கு விப்பதென்று சொல்லி மட்டக்களப்பில் வடக்கு மற்றும் மண்முனைப்பற்றுப் பிரதேசங்களில் ஒருவருக்கு மூன்று ஏக்கர் மரமுந்திரிச் செய்கைக்குக் கொடுத்ததைப் போன்று தற்போது இந்த தமிழ் பண்ணையாளர்களின் மேய்ச்சற்தரையை அபகரித்து சுமார் ஆயிரத்து ஐநூறு ஏக்கரில் மரமுந்திரிச் செய்கை பண்ணப்பட்டு எமது அண்மித்த மாவட்டமான அம்பாறை மாவட்டப் பெரும்பான்மையின மக்களுக்கு இது பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவே எமக்குத் தோணுகின்றது.

ஏனெனில் இந்த மரமுந்திரிச் செய்கையிலே குறிப்பிட்டவர்களது பெயர்களைப் பதிவு செய்து இரண்டு ஏக்கர் வீதமாக அவர்களைப் பராமரிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒட்டுமொத்தமாக இந்த சிவில் பாதுகாப்புப் படை மரமுந்திரிகையை நட்டு இரண்டு இரண்டு ஏக்கராக ஒருவரைப்பராரிப்பதற்கும் விட்டிருப்பதைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் அந்த நபர்களுக்கே அந்த ஏக்கர்களை பிரித்துக் கொடுத்து இங்கு ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தின் இனப்பரம்பலைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகத் தான் நாங்கள் இதனைக் கண்கூடாகப் பார்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

திருமலை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற பெரிய வெள்ளி ஆராதனை

திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் ஏற்பாட்டில் ஒல்லாந்தர் குடா கடற்கரையில் பங்குதந்தை ரொபின்சன் அடிகள் தலைமையில் நடைபெற்ற பெரிய வெள்ளி ஆராதனை நிகழ்வில் பெருமளவிலான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டிருப்பதை இங்கு காணலாம்.

படம்: கதிரவன்

கெவிலியாமடுவில் புதிய குடியேற்றம் சட்ட நடவடிக்கை எடுப்போம்

சுமந்திரன் தெரிவிப்பு

(துதி மோகன்)

அரச திணைக்களம் பாதுகாக்க வேண்டிய வளங்களை அழித்து கெவிலியாமடு பிரதேசத்தில் ஒரு குடியேற்றத்திட்டத்தை உருவாக்குவதற்கான முதற் படிகள் மேற்கொள்ளப்படுவதாக தோன்றுகிறது. இதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இதனை நாங்கள் ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கெவிலியாமடு பிரதேசத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சற்தரையில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுவது குறித்த களவிஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்கள் தங்கள் வாழ்விடங்களில் மீள்குடியேற்றம் செய்ய முடியாமல் இருப்பதற்கு ஒரு காரணம் வன இலாகா. மக்கள் வாழ்ந்த இடங்களையும் வனங்கள் என்று பிரகடனப்படுத்தி தற்போது எமது மக்கள் அங்கு செல்ல முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்றது. ஆனால் இங்கு வனப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய இந்த வனங்கள், அந்தச் சட்டம் அப்படியே இருக்கத்தக்கதாக அதன் அதிகாரிகள் வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கத்தின் இன்னுமொரு திணைக்களத்திற்கு அதனை அழிப்பற்கான அனுமதியைக் கொடுத்திருக்கின்றார்கள். அது சட்டபூர்வமாகக் கொடுக்கப்படவில்லை. சட்டவிரோதமாக நடைபெறுகின்ற இந்த விடயத்தைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பிரதேச செயலாளரிடம் இதனைப் பற்றிக் கேட்டால் தெரியாது என்று சொல்கின்றாராம். இவர்களிடத்தில் கேட்கும் போது தாங்கள் அனுமதி கேட்டிருக்கின்றோம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்கின்றார்கள். எனவே அரச திணைக்களமே பாதுகாக்க வேண்டிய வளங்களை அழித்து ஒரு குடியேற்றத்திட்டத்தை உருவாக்குவதற்கான முதற்படிகளை இங்கே மேற்கொள்வதாகத் தோணுகின்றது.

2015 ன் முன்னர் சிலர் இங்கு வந்து பயிர் செய்தார்கள். ஆனால் 2015ல் இருந்து அது முற்றாகத் தடுக்கப்பட்டது, வன இலாகா அதிகாரிகள் அவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்திருந்தார்களாம் என்ற சொல்லுகின்றார்கள். ஆனால் தற்போது வெறுமனே பிரஜைகள் அல்ல சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குப் பிரித்துக் கொடுத்து மரமுந்திரிகைச் செய்கை இடம்பெறுகின்றது. மேய்ச்சற்தரைக்கு வருகின்ற மாடுகள் இவர்களால் போடப்பட்டிருக்கும் கம்பி வேலிகளிலே சிக்குண்டு இறக்கின்றன. ஆனால் அதைவிட முக்கியமாக ஒரு பாரிய குடியேற்றத் திட்டமொன்று ஆரம்பமாகியிருக்கின்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது.

இதற்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க முடியும். இதனை நாங்கள் ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றத்தில் மட்டு.மேற்கு கல்வி வலயம் பாதிப்பு

(படுவான் பாலகன்)

ஸ்ரீகிழக்கு மாகாணத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு அமைய மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றிய 98 ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் வேறு கல்வி வலயங்களில் இருந்து 7ஆசிரியர்கள் மாத்திரமே மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளை முழுமையாக கொண்ட வலயமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் உள்ளமையுடன், ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவி வருன்றது. இந்நிலையில் அதிகளவிலான ஆசிரியர் இங்கு இருந்து இடமாற்றப்பட்டு குறைந்தளவிலான ஆசிரியர்கள் குறித்த வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக மட்டக்களப்பு மேற்கு கல்வி சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஐக்கியத்திற்காகவும்,அமைதிக்காகவும் உழைத்த கலா முதுசம் சரிந்து விட்டது

முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளன தலைவர்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மதங்களைக் கடந்த மனித நேயத்தின் மறுபெயர் தான் மரிய சேவியர்.கலை இலக்கியத்திற்காகவும் மனித நேயப்பணிகளுக்காகவுமே தன்னை முழுமையாக அர்ப்பணித்த மகோன்னத மேதை அவர் என மட்டு.மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

திருமறை கலாமன்றம் எனும் இன மத மொழி கடந்த கலை இலக்கிய அமைப்பிற்கூடாக சுமார் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக பணிசெய்தவர்.குறித்த திருமறை கலா மன்றத்தின் தேசிய ஆலோசனை சபையில் அடியேனும் நியமிக்கப்பட்டிருந்தேன்.

2001ம் ஆண்டு எனக்கு தேசிய சாஹித்திய மண்டல விருது கிடைத்தபோது யாழ்ப்பாணத்திற்கு அழைத்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தார்.அது ஒரு தேசிய சமாதான விழா. மூன்று நாட்கள் நடைபெற்ற அவ்விழாவில் தென்பகுதியைச் சேர்ந்த அதிகமான பெரும்பான்மையின உறவுகள் பங்கு கொண்டிருந்தனர்.

அவ்விழாவில் இனங்களிடையேயான ஐக்கியம் தொடர்பாக நான் உரை நிகழ்த்தினேன்.சுமார் ஒரு மணி நேரம் உரை நிகழ்த்தி விட்டு நிறைவுக்கு வர அரங்கிற்கு ஏறி வந்த அருட்தந்தை மரியசேவியர் அவர்கள்.'இந்த உரையை நீங்கள் மாத்தறையில் நடைபெறும் சமாதான விழாவில் சிங்கள மக்களிடையே பேச வேண்டும்' என ஒலி வாங்கியூடாகக் கேட்டுக் கொண்டார்.அவ்வாறு இனங்களிடையே ஐக்கியத்திற்காகவும்,அமைதிக்காகவும் உழைத்த கலா முதுசம் சரிந்து விட்டது.

தமிழில் சிங்களத்தில் ஆங்கிலத்தில் மொழிகளைக் கடந்து தனது திருமறை கலா மன்றத்தினூடாக ஐக்கிய வாழ்விற்காக கலைகளூடாகவும்,இலக்கியத்தினூடாகவும் பணி செய்தவர்.

தன்வாழ்வின் மிகக்கூடுதலான பகுதியை கலைகளூடாக சமாதானத்திற்காக அர்ப்பணித்தவர்.அவரது மறைவு மனசை ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு தாக்குவதுபோல் செய்கிறது.நல்ல உள்ளங்களின் பிரிவு இருதயத்தை வறுத்தெடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொஹமட் செய்தால் கோசம் விஜயரத்ன செய்தால் மௌனம்

சாணக்கியன் ஆவேசம்

இந்த இடத்தில் ஒரு மொஹமட் வந்து ஏக்கர் கணக்கில் மரத்தை நாட்டியிருந்தால் இதற்கு எமது கிழக்கை மீட்க வந்தவர்கள் பெரிய கோசம் எடுத்திருப்பார்கள். ஆனால் இந்த இடத்திலே ஒரு விஜயரத்ன செய்யும் போது எந்தக் குரலையும் எழுப்ப முடியாத அளவில் அவர்கள் இருப்பது மனவேதனையான விடயம். எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டால் அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கெவிலியாமடு பிரதேசத்தில் பண்ணையாளர்களின் மேய்ச்சற் தரையில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுவது குறித்த களவி ஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்,

கொவிலியாமடு பிரதேசத்தில் சட்ட விரோதமாகச் செய்யப்படும் மரமுந்திரி கைச்செய்கை தொடர்பில் ஆராய்வதற்கா கவே நாங்கள் வந்திருக்கின்றோம். இங்கு விஜ யரெட்ணவுக்கு இரண்டு ஏக்கர், திலகரெட்ணவுக்கு மூன்று ஏக்கர் என்று எழுதப்பட்டு முந்திரிகை மரம் நாட்டப் பட்டுள்ளது. கடந்த 2015ல் இருந்து நல் லாட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று கேட்டவர்களுக்கெல்லம் இன்று இங்கு சிவில் பாதுகாப்பு அதிகாரிகளே பதில் சொல்லியிருக்கின்றார். தாங்கள் அப் போது இவ்வாறான சட்டவிரோத நட வடிக்கைகளைச் செய்யும் பொது 2015ம் ஆண்டு அதைத் தடை செய்ததாகச் செ ால்லியிருந்தார்கள்.

மட்டக்களப்பில் நாங்கள் நான்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். இந்த மாவட்டத்தில் இருக்கும் பொதுவான பிரச்சினைக ளுக்கு நாங்கள் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் அவர்களுடன் கதைத்திருந்தோம். எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டால் அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அந்த இடத்தில் நான் சொல்லியிருந்தேன்.

ஆனால் இன்று பார்த்தால் இந்த இடத் தில் ஒரு மொஹமட் அல்லது அஹமட் வந்து ஏக்கர் கணக்கில் மரத்தை நாட்டி யிருந்தால் இதற்கு எமது கிழக்கை மீட்க வந்தவர்கள் பெரிய கோசம் எடுத்தி ருப்பார்கள். ஆனால் இந்த இடத்திலே ஒரு விஜயரத்ன செய்யும் போது எந்தக் குரலையும் எழுப்ப முடியாத அளவில் அவர்கள் இருப்பது மனவேதனையான விடயம்.

அதே நேரத்தில் ஒரு தமிழ் விவசா யியோ அல்லது பண்ணையாளரோ வனப் பகுதிக்குள் சிறு கத்தியுடன் வந்தால் கூட உடனடியாக அவர்களை நீதிமன்றங்க ளுக்கு கொண்டு செல்லும் வன இலாகா திணைக்களம் இவ்வாறாக ஆறாயிரம் மரங்களை நாட்டும் வரைக்கும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைக் கேட்க வேண்டும்.

இவ்வாறாக எமது மேய்ச்சற்தரைகள் சி வில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இரண்டு இரண்டு ஏக்கர்கள் செய்கைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த மாவட்டத்தில் அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்கின்றார்கள் என்பதையும் கேட்க வேண்டும். நிச்சயமாக அவர்களும் எங்களுடன் இணைந்து இந்த விடயத் தைத் தட்டிக் கேட்பதற்குக் கைகோர்க்க வேண்டும். ஆனால் அவர்கள் இருவரும் மண் மாபியா செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மிகவும் மனவேதனையுடன் சொல்ல வேண்டி இருக்கின்றது என்று தெரிவித்தார்.

வெருகல் பிரதேசத்தில் ஆச்சி பாரம்பரிய உணவகம் திறந்து வைப்பு

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை வெருகல் பிரதேசத் தில் ஆச்சி பாரம்பரிய உணவகம் திறந்து வைக்கப்பட்டது. வெருகல் பிரதேச செய லாளர் க. குணநாதன், விஎபெக்ற் திட்டமு கமையாளர் பிரியந்த ஜயக்கொடி, நிதிக்கட் டுப்பாட்டாளர் புபுது பெரேரா, இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் திட்டமு கமையாளர் த. திலீப்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வைபவரீதியாக திறந்து வைத்தனர். இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் ஏற்பாட்டில் we effect இன் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வுணவகம் பாரம்பரிய உணவு உற் பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகை யில் வெருகல் பிரிவில் திருகோணமலை மாவட்ட அகம் சமூக பொருளாதார அபி விருத்தி கூட்டுறவுச்சமாசத்தினால் முதன் முறையாக திறந்து வைக்கப்பட்டது.

புதையல் தோண்டிய ஐந்து சந்தேக நபர்கள் கைது

(எம்.முபாரக்)

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வில்கம் விகாரைகாட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட் டின் பேரில் ஐந்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திரு கோணமலை - கண்டி வீதி ஐந்தாம் கட்டை பகுதியில் வசித்து வரும் உபுல் புஸ்பகுமார தெல்கொட (52 வயது) மற்றும் ஹேமந்த விஜயசிங்க (44 வயது), அனுராதபுரம்-றுக் கஹவில பகுதியில் வசித்து வரும் ராஜபக்ச முதியன்சலாகே பந்துல ராஜபக்ச (62 வய து), அனுராதபுரம்-தாவந்திபுர பகுதியைச் சேர்ந்த சமரக்கோன் முதலாகே ஜகத் சந்தன சமரக்கோன் (50 வயது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை வெல்கம் விகாரைகாட் டுப்பகுதியில் புதையல் தோண்டுவதாக விசேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து அங்கு விரைந்த, விசேட பொலிஸ் அதி ரடி படையினர் அலவாங்கு-மண்வெட்டி போன்றவற்றுடன் ஐந்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நாளை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இராயப்பு யோசேப் அண்டகையின் பூதவுடலுக்கு முக்கியஸ்தர்கள் அஞ்சலி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் ஆயர் இல்லத்தில் அமைந் துள்ள சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள மன்னார் மறைமா வட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அமரர் பேரருள் இராயப்பு யோசேப்பு ஆண் டகையின் பூதவுடலுக்கு பொதுமக் கள், அரசியல் மற்றும் மதத் தலைவர் கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி யாழ் கன்னி யர் திருச்சிலுவை வைத்தியசாலையில் இயற்கை எய்திய மன்னார் மறைமா வட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட் இரா யப்பு யோசேப்பு ஆண்டகையின் பூத வுடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்திலி ருந்து மன்னாருக்கு எடுத்துவரப்பட்டு தற்பொழுது மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில்மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் வருகைதந்து மறைந்த ஆயரின் பூதவுடலுக்கு தங் கள் அஞ்சலியையும் செப வழிபாடுக ளையும் செய்து வருகின்றனர்.

குறிப்பாக சுகாதார நடைமுறை களை கவனத்தில் கொண்டு மன்னார் மறைமாவட்டத்திலுள்ள சகல பங்கு மக்களுக்கும் குறிப்பிட்ட நேரங்கள் ஒதுக்கப் பட்டு அவ் நேரங் களில் மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத் தவும் செபவழிபாடுகளை நடத்த வும் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு அமைவாக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

தற்பொழுது ஆயர் இல்லத்தில் வைக்கப்படடிருக்கும் மறைந்த ஆய ரின் பூதவுடலுக்கு கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த மெதடிஸ்த ஆயர் பேரருட் எபநேசன் யோசப் ஆண் டகை, வன்னி பாராளுமன்ற உறுப் பினரும் முன்னாள் அமைச்சருமான றிசாட் பதியுதீன், முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட பல முக்கியஸ்தர் கள் மற்றும் பொதுமக்களும் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

சாணக்கியனும் சுமந்திரனும் தமிழ்மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார்கள்

கஜேந்திரன் குற்றச்சாட்டு

(பாறுக் ஷிஹான்)

சாணக்கியனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துள்ளது டன், அந்த துரோகத்தை மறைக்கும் செயற் பாட்டிலும் ஈடுபட்டுள்ள னர் என்பதை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டி ருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம் பெற்ற விசேட செய்தியாளர் சந்திப் பில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியாவின் எடுபிடிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினை வைத்து மைத்திரியை வெல்ல வைத்தார் கள். இதனால் ரணில் மைத்திரி நல் லாட்சி வருகின்றது. இது அவர்க ளுக்கு வேண்டப்பட்ட ஆட்சி. இந்த அரசின் 5 ஆண்டு காலப்பகுதியில் எவ்வித உள்ளக விசாரணையும் நடத் தப்படவில்லை.

சுமந்திரன் எம்.பி தற்போது கூறு கின்றார் உள்ளக விசாரணை தான் வேண்டும். காரணம் இந்த நாட்டில் தான் நாம் சேர்ந்து வாழ வேண்டும். ஆகவே இந்த நாட்டில் குற்றங்கள் நடந்திருந்தால் அவை விசாரிக்கப் பட வேண்டும். விசாரிக்கப்படுவது தான் நாட்டிற்கு நல்லது. ஆகவேதான் இந்த தீர்மானத்தை வரவேற்றதாக குறிப்பிடுகின்றார்.

ஆனால் 2015 ஆண்டு ராஜபக்ச வினை தேர்தலில் வீழ்த்தி சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வோம் என கூறினார் கள். இதனை நம்பி சகல மக்களும் விழுந்தடித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றித்திற்கு அவரை(ராஜபக்ச) கொண்டு செல்ல வேண்டும் என்ப தற்காக மைத்திரிக்கு வாக்களித்தார் கள்.

இதன் பிறகு 2019 வரை இந்த ஆட் சியில் ஏன் உள்ளக விசாரணையை வலியுறுத்தவில்லை என்பதை கேட்க விரும்புகின்றேன். நம்பிக்கை இருக் கின்றது என கூறி கால நீடிப்பினை தானே வழங்கி கொண்டிருந்தீர் கள். உங்களுடைய நோக்கம் குற் றங்கள் விசாரிக்கப்படுவதற்கல்ல .உங்களுடைய நோக்கம் குற்றங்கள் நடைபெற வேண்டும். அந்த குற்றங் களை வைத்துக்கொண்டு சர்வதேச நாடுகள் ஆவணங்களை தயார் செய்ய வேண்டும். மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை.

சுமந்திரன் அவர்கள் 2015 தொடக் கம் 2019 வரை ஜெனிவாவில் இலங்கையை எந்த அளவில் மீட்டு கொண்டு வந்தீர்கள் என கேட்கின் றேன். சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்திற்கு இலங்கையை கொண்டு செல்லும் வாய்ப்பு சுமந்திரன், சா ணக்கியன், சம்பந்தன் ஆகியோரி னால் வழிநடத்தப்பட்டுக் கொண்டி ருக்கின்ற கூட்டமைப்பினால் இல் லாமல் செய்யப்பட்டுள்ளது. அங்கே டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன், பிள்ளையான், வியாளேந்திரன், திலீபன் போன்றோர் பேரினவாத கட்சியின் முகவர்கள். இதில் பிள்ளை யான், டக்ளஸ் தேவானந்தா போன்ற வர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்தில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர்.

அவர்கள் அரசாங்கத்தோடு இருப் பவர்கள். ஏனைய 13 பேரில் அறுதிப் பெரும்பான்மையுடன் உள்ள கூட் டமைப்பினர் பாதிக்கப்பட்ட மக்க ளின் பிரதிநிதிகள் என்ற வகையில் 46:1 தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என கூறியதன் மூலம் அது உள்ளக விசாரணையை வலியுறுத்தி இருக் கின்றது. உள்ளக விசாரணையை வர வேற்பதாக இவர்கள் கேட்டுக்கொண் டதனால் தான் இந்த தீர்மானம் நிறை வேறி இருக்கின்றது.

இதனால் சர்வதேச குற்றவியல் நீ திமன்றத்திற்கு செல்லும் வாய்ப்பு இவர்களின் செயற்பாட்டினால் இல் லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

வவுணதீவில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

(எஸ். சதீஸ்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதே சத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களுடன் நால் வர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி நிஷாந்த ஹப்புகாமியின் ஆலோ சனைக்கமைய பொலிஸ் உத்தியோகத் தர்களால் வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் காஞ்சிரங்குடா, குருந்தை யடிமுன்மாரி பகுதியில் நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உழவு இயந்திரப் பெட்டியில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் மண் ஏற்றியபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உழவு இயந்திரங்களும், அதிலிருந்த நான்கு நபர்களும் கைது செய்யப்பட்டு, இருவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதுடன் மற்றும் இருவரையும் இரு வாகனங்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வவுணதீவு பொலிஸ் பொறுப் பதிகாரி நிஷாந்த ஹப்புகாமி தெரிவித்தார்.

திருமலை உட்துறைமுக வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயம்

(எப்.முபாரக்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உட்துறைமுக வீதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த மூவரும் திருகோணமலை பொது வைத்தியச ாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்ச க்கரவண்டி நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இரு வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

விபத்தில் முச்சக்கரவண்டி சாரதியான திருகோணமலை - ஜமாலியா, நெல்சன் புறபகுதியைச் சேர்ந்த பரீஸ்தீன் (37 வயது) மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த உப்புவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரி பகுதியை சேர்ந்த 19 வயதுடைய இரு இளைஞர்கள் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சில வீதிகளின் இருமருங்குகளையும் அழகு தரும் மரக்கன்றுகளை நடும் "இயற்கையால் துறையூரை அழகுபடுத்துவோம்" எனும் தொனிப்பொருளினாலான மரம் நடும் நிகழ்வொன்றினை சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் கழகத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தனர். நாளுக்கு நாள் மரங்கள் பல்வேறு காரணங்களால் அழிக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றை மீண்டும் நடுவதன் மூலம் இயற்கையின் சுழற்சிக்கு பங்களிப்பு செய்யும் இம் முயற்சியில் கழக வீரர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

[எம்.ஐ.எம்.அஸ்ஹர்]

கடின பந்து கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

[எம். என்.எம்.அப்றாஸ்]

இளைஞர் யுவதிகளின் மத்தியில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தம் முகமாக நடளாவிய ரீதியாக அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச அவர்களின் வழிகாட்டலில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கு கடின பந்து கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி முக்கியஸ்தகரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபை உறுப்பினர் றிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது அல் -ஹிலால் வித்தியாலயத்தில் (02) நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்சவின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சிபான் மஹ்ரூப், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் றொனி இப்ராஹீம் மற்றும் அமைச்சரின் கிரிக்கெட் விவகார இணைப்பாளர் ஜெனரல் டனீஸ் டயஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன், மற்றும் றிஸ்லி முஸ்தபாவின் செயலாளர் ஏ.எல். ஜவாஹிர் இளைஞர் பாரளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.ரிஹான் மற்றும் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதன் போது கலந்துகொண்டனர்.

அரசு சிங்கள மக்கள் மத்தியில் பலவீனமடைவதாலேயே மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுகின்றது!

பாராளுமன்ற உறுப்பினர் – கோ.கருணாகரம்

இந்தக் கொடூரமான ஆட்சி, ஒட்டுமொத்த சிங்கள மக்களினாலும் கொண்டு வரப்பட்ட ஆட்சி, இன்று சிங்கள மக்கள் மத்தியிலேயே பலவீனமடைந்து கொண்டு வருகின்றது. எனவே மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான அறிகுறியாகக் கூட இது இருக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

மறைந்த ஓய்வு நிலை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களின் இறுதிச் சடங்கு நடைபெறும் திங்கட் கிழமையை அரசு துக்க தினமாக அங்கீகரிக்கா விடினும் தமிழ் பேசும் மக்கள் இதனை துக்கநாளாக அனுஸ்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒடுக்கப்பட்ட தமிழினத்திற்காக ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த ஓய்வு பெற்ற முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். தமிழ் மக்கள் மீது நடந்த அநீதியைத் தட்டிக் கேட்டது மட்டுமல்லாது 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்திலே முள்ளிவாய்க்காலில் இலட்சக் கணக்கான எமது மக்கள் கொல்லப்பட்டதற்கு ஐநா மனித உரிமைப் பேரவைக்கு ஒரு சாட்சியாளராக இருந்திருக்கின்றார். அந்த வகையில் எமது இனம் அவருக்கு கடமைப்பட்டதாக இருக்கின்றது, அந்த அடிப்படையில் அவருக்காக எமது கண்ணீர் அஞ்சிலியைச் செலுத்துகின்றோம்.

அவரது இறுதிச் சடங்கு நடைபெறும் திங்கட்கிழமையை அரசு துக்கதினமாக அனுஸ்டிக்க வேண்டும் என்று எமது கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அரசு அதற்குச் செவிசாய்க்கின்றதோ இல்லையோ நாங்கள் தமிழ் பேசும் இனம் எதிர்வரும் திங்கட்கிழமையை எமது இனத்தின் துக்ககரமான நாளாகப் பிரகடணப்படுத்தி முடிந்தளவு எமது வீடுகளிலும், வியாபாரா நிலையங்களிலும் வெள்ளைக் கொடிகளையோ, கறுப்புக் கொடிகளையோ பறக்க விட வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் பொதுஜனப் பெரமுன கட்சியினர் இந்த நாட்டின் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகின்றார்கள். 1987ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த மகாணசபை முறைமை முற்றாக நிராகரிக்கப்பட்டு ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதிகளின் ஆளுமையின் கீழ் ஆட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருகின்றது. கடந்த ஜெனீவா கூட்டத் தொடரின் போது கூட மாகாணசபைத் தேர்தல்கள் முறையாக நடாத்தப்பட்டு முழு அதிகாரங்களும் பரவலாக்கப்பட்டு அந்த அந்த மாகாண மக்களின் கைகளிலே அந்த அந்த அரசுகள் கையளிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் மேலோங்கியிருக்கின்றன. அவ்வடிப்படையில் மாகாணசபைத் தேர்தல்கள் மிக விரைவாக நடைபெற வேண்டும்.

இளைஞர்களுக்கு பாலியல் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சி!

பாலியல் ஆரோக்கியத்தை ஊக்குவித்தல் மற்றும் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்களிலிருந்து முற்றாக காத்தல் ஆகிய செயற்பாடுகளில் இளைஞர்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் இளைஞர்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி நேற்று (03) காலை இலங்கை ஐக்கிய சமூக முன்னணியின் ஏற்பட்டில் அமைப்பின் தலைவரும், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. கபூர் அன்வர் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்கிய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஷான் பாலியல் ஆரோக்கியத்தை ஊக்குவித்தல் மற்றும் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்களிலிருந்து முற்றாக காத்தல் தொடர்பிலான விரிவுரை நிகழ்த்தினார்.

மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அஸ்மி காரியப்பர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலைய பொறுப்பாளர் எம்.டீ. எம். ஹாரூன், கிழக்கு மாகாண கணனி தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளர் சபை உறுப்பினர் யூ.எல்.என். ஹூதா உமர், பொதுச்சுகாதர பரிசோதகர் எம்.என்.எம். பஸ்லின், பாலியல் ஆரோக்கிய விசேட பொதுச்சுகாதர பரிசோதகர் எஸ். எம். ஜமான் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய சம்மேளன பிரதிநிதி சிப்னாஸ் அஸீஸ், இலங்கை ஐக்கிய சமூக முன்னணியின் செயலாளர் எம்.எஸ்.எம். இம்தியாஸ், பொருளாளர் முக்கிய உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலையில் அஞ்சலி நிகழ்வு!

[ஹஸ்பர் ஏ. ஹலீம்]

திருகோணமலை T.D.D.A . மண்டபத்தில் நேற்று முன்தினம் இராவணை சேனை அமைப்பின் ஏற்பாட்டில் மறைந்த அதிவணக்கத்துக்குரிய ஓய்வுநிலை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் திருமலை மட்டுநகர் ஓய்வுநிலை அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார்கள்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Best Regional Creative Co. The Year 2013
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org